## இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் - 2018

-----------------------------------------------------------------------

### 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இலங்கை மீன் பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் தொடர்பான கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்ட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் விதிகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற் கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கூட்டுத்தாபனத்தின் இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை. கணக்காய்வு மறுப்பு அபிப்பிராயம் தொடரப்பான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தேன்.

### 1.2 அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது கணக்காய்வு மறுப்பினை நான் மேற்கொண்டேன். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்றிற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத் தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமையின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யும் போது கூட்டுத் தாபனத்தினை தொடர்ச்சியாக நடத்திச் செல்வதற்கான இயலுமையைத் தீர்மானித்தல் முகாமையின் பொறுப்பு என்பதுடன், முகாமை இலங்கை மீன் பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தினை முடிவுறுத்துவதற்கு அபிப்பிராயப்படும் எனின் அல்லது வேறு மாற்று வழி ஒன்று காணப்படாதவிடத்து தொழிற்பாட்டினை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் அன்றி கூட்டுத் தாபனத்தினை தொடர்ச்சியாக நடத்திச் செல்லும் அடிப்படையில் கணக்கீடுகளைப் பேணி அத்துடன் இலங்கை மீன் பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தினை தொடர்ச்சியாக நடத்திச் செல்லல் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமையின் பொறுப்பாகும்.

இலங்கை மீன் பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொறுப்பு, நிர்வாகம் மேற் கொள்ளும் தரப்பினரின் மூலமும் ஏற்கப்படுகிறது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் இலங்கை மீன் பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பாக விளக்கம் ஒன்றினைப் பெற்றிருந்த போதும் உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயம் ஒன்றைத் தெரிவிப்பதற்கு எண்ணவில்லை.

- முகாமை மூலம் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருந்தக் கூடிய தன்மை மற்றும் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புற்ற வெளிப்படுத்தல்கள் என்பவற்றின் நியாயத் தன்மை மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தொடர்ச்சியான தொழிற்பாடு தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை ஒன்று உள்ளதா என்பது தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீடு தொடர்பாக நிறுவனத்தின் தொடர்ச்சியான தொழிற்பாடு தொடர்பான அடிப்படை பயன்படுத்தல் சார்பு தீர்மானிக்கப்பட்டது. போதியளவு நிச்சயமற்ற தன்மை ஒன்று உள்ளதாக நான் தீர்மானித்தால் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு

எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாவிட்டால் எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்படல் வேண்டும். எனது முடிவுகள் கணக்காய்வாளர் அறிக்கையின் திகதி வரை பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் மீது அடிப்படையானவை ஆகும். அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். எனினும், எதிர் கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் அடிப்படையில் தொடர்ச்சியான தொழிற்பாடு நிறைவு பெறக் கூடும்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டது.

இயன்றளவு மற்றும் அவசியமான எந்த நேரத்திலும் கீழ் வரும் விடயங்களைப் பரீட்சித்தல் தொடர்பாக கணக்காய்வு விடயப் நோக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல் வழங்கல் குறித்து அதிகார சபையின் தொடர்ச்சியான செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக் கூடிய வகையில் அதன் ஒழுங்குகள், அமைப்புகள், நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவும் திட்டமிடப்பட்டு உள்ளதா என்பதையும் மற்றும் அதன் ஒழுங்குகள், அமைப்புகள், நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் பயனுள்ள வகையில் பேணப்படுகின்றதா என்பதையும்,
- ஏதேனும் தொடர்புற்ற எழுத்திலான சட்டம் ஒன்றிற்கு அல்லது அதிகார சபையின் கட்டுப்பாட்டு சபை மூலம் விதிக்கப்பட்டுள்ள வேறு ஏதாவது பொது அல்லது விஷேட கட்டளை ஒன்றிற்கு இணங்க அதிகார சபை தொழிற்பட்டுள்ளது என்பதையும்,

- தனது அதிகாரம், பணிகள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றிற்கு இணங்க தொழிற்பட்டுள்ளது என்பதையும்,

- வளங்கள் சிக்கன அடிப்படையிலும், செயற் திறன் மிக்க அடிப்படையிலும் பயன் மிக்க அடிப்படையிலும் கால எல்லைக்குள் மற்றும் தொடர்புற்ற சட்ட திட்டங்களுக்கு இணங்க தொகுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்,

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமையினை பொது மற்றும் குறிப்பிட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல், தொடர்புற்ற அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்கள் தொடர்பாக கணக்கீட்டுச் செயற்பாட்டுத் தன்மையைப் பேணிச் செல்லல், முகாமையின் பொது மற்றும் குறிப்பிட்ட அதிகாரத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பான கணக்கீட்டுச் செயற்பாட்டுத் தன்மையை நிலவுகின்ற சொத்துக்களுடன் நியாயமான கால எல்லைகளுக்குள் ஒப்பீடு செய்து அத்துடன் ஏதேனும் வேறுபாடு காணப்பட்டால் அவை தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்தல் என்பவை தொடர்பாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவான ''நேர்த்தியாகத் திட்டமிடப்பட்ட'' உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று நிறுவனத்தின் மூலம் பேணிச் செல்லல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**கணக்காய்வு அவதானிப்பு**

--------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமையின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நிதி ஒழுங்கு விதிகள் 128 (1) (ஈ) 135 மற்றும் 140 (அ) இற்கு இணங்க கற்பிட்டி மீன் பிடி துறை முகத்தின் 23 கொடுப்பனவுப் பற்றுச் சீட்டுகள் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 15,719,808 பெறுமதியான தொகை தொடர்பாக போதிய அளவான உள்ளக சோதணை முறை ஒன்று பேணிச் செல்லப் படவில்லை எனவும் அந்த முறைமையின் செயற்பாட்டினை காலத்திற்குக் காலம் சோதணை செய்யப்பட வில்லை என்பதுடன் பற்றுச் சீட்டு தயார் செய்தல், காசுப் புத்தகம் எழுதுதல் போன்ற நடவடிக்கைகள் வேலையாள் பணியாளர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்ததன் காரணமாக அந்தப் பற்றுச் சீட்டுக்களைப் பரிந்துரை செய்தல், அங்கீகரித்தல், செலவுகளை உறுதிப் படுத்தல், ஒரே அலுவலர் மூலம் மேற் கொள்ளப்பட்டிருந்தது. | முகாமை கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | நிதி நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) இலங்கை மீன் பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் நிதி நடவடிக்கைகள் தொடர்பாக போதிய அளவான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்று பேணிச் செல்லப் படவில்லை என்பதனால் கற்பிட்டி மீன் பிடி துறை முகத்தின் எரி பொருள் வினியோகம் தொடர்பாக பௌதீக பரிசோதனையின் போது எரி பொருள் நிரப்பும் பணியாளர் மூலம் 2 தினங்கள் எரி பொருள் வினியோகம் மூலம் பெறப்பட்ட வருமானமான ரூபா 323,400 பெறுமதியான தொகை துறை முகக் காசாளரிடம் ஒப்படைக்காது அவர் வசம் வைத்துக் கொள்ளப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | மீன்பிடித் துறைமுகத்தில் எரிபொருள் வினியோகிக்கும் போது மீன்பிடி படகு உரிமையாளர்கள் மற்றும் அவர்களுடைய பணியாட் தொகுதியினர்கள் எரி பொருள் தொடர்பாக பணம் செலுத்துவதற்கு அலுவலகத்திற்கு வருவதற்கு தயக்கம் காட்டுவதுடன் நேரடியாக விற்பனை நிலையத்திற்குப் பணம் செலுத்தி எரிபொருள் பெறுவதற்கு முனைகின்றனர். பின்னர் மீன்பிடி சங்கங்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல்களுக்கு இணங்க துறைமுக அலுவலகத்திற்கு எரிபொருள் பணத்தினை வழங்குவதற்கு ஒப்புக் கொள்ளப்பட்டது. | நிதி நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்படல் வேண்டும். |

## 1.5.2 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமையின் அபிப்பிராயம் தெரிவிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டு மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப் பட்ட ரூபா 8,325,121 தொகை பெறுமதியான சொத்துக்கள் மீளாய்வு ஆண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டு இருந்த போதும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 03 இன் 47 மற்றும் 54 பந்திகளுக்கு இணங்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு சென்ற வருடத்தின் ஒப்பீட்டு ரீதியான தகவல்களுடன் இணக்கம் செய்து சமர்ப்பிக்கப் பட்டு இருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் சென்ற வருடத்தின் ஒப்பீட்டு ரீதியான தகவல்களை சரி செய்யும் நடவடிக்கையை, 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயார் செய்யும் போது மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒப்பீட்டு ரீதியான தகவல்களை சரியான முறையில் இணக்கம் செய்து ளுடன் இணக்கம் செய்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

## 1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமையின் அபிப்பிராயம் தெரிவிப்பு | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 30,209,500 தொகை பெறுமதியான மணல் மூட்டைகள் பயன் படுத்தப்பட்டு தயார் செய்யப்பட்ட அலை உடைப்பின் (Break Water) பயனுள்ள ஆயுட் காலம் களு கங்கையில் முடிவடையும் நீர் உடைப்பின் ஆயுட் காலத்தை விட குறைவு எனினும் அதனையும் 40 ஆண்டுகள் எனக் கருதி மீளாய்வு ஆண்டு தொடர்பாக தேய்மான ஒதுக்கம் மேற் கொள்ளப்பட்டிருந்தது. | மணல் மூட்டைகள் பயன் படுத்தப்பட்டு தயார் செய்யப்பட்ட அலை உடைப்பின் தேய்மான வீதமான 10% த்தினை அடிப்படையாகக் கொண்டு தொடர்புற்ற தேய்மானக் கணிப்பீடு மேற் கொள்ளப்பட்டு நாளேட்டுக் குறிப்பின் மூலம் திருத்தம் மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. | சொத்துக்களின் ஆயுட் காலத்திற்கு அமைய தேய்மானம் தொடர்பாக அவசியமான கணக்கீட்டுக் கொள்கைகள் அறிமுகப் படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | கூட்டுத் தாபனத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க வாடகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் அதன் சாதாரண பெறுமானத்திற்கு அளவீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப் படும் என தெரிவிக்கப் பட்டு இருந்தும், கூட்டுத் தாபனத்தின் மூலம் வாடகைக்கு விடப்பட்ட 87 சொத்துக்களின் சாதாரண பெறுமானம் அளவீடு | சொத்துக்களின் பெறுமதி மறு மதிப்பீடு செய்ததன் பின்னர் அதன் பெறுமதியை சமர்ப்பிப்பதற்கு குறித்துக் கொள்கிறேன். | சொத்துக்கள் அதன் சாதாரண பெறுமானத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும். |

செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சொத்துக்கள் தொடர்பான விபரங்களில் ஆகக் குறைந்தது கிரயமாவது உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை.

## 1.5.4 கணக்கியல் குறைபாடுகள்

---------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவம் தெரிவித்த கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டட நிர்மாண ஒப்பந்தங்கள் 3 இன் பெறுமதி கணக்கில் பதியப்படும் போது மொத்தத் தொகை ரூ. 8,157,552 பெறுமதியினால் குறைவாகப் பதியப பட்டமையால் மீளாய்வு ஆண்டின் சொத்துக்களின் கிரயம் மற்றும் உபகரணங்களின் பெறுமதி மற்றும் அதற்கு உரிய பெறுமான் தேய்வு குறைவாகக் காட்டப் பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் மூலதனப்படுத்தலுக்காக நாளேடு குறிப்பு வைக்கப்படும். | கட்டட நிர்மாணங்களின் சரியான கிரயம் மூலதனப் படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வு ஆண்டின் நிலையான சொத்துக்களுக்கு உரிய தேய்மானம் செலவாக ரூ. 217 மில்லியன் நிதி நிலைமைக் கூற்றுக்களில் குறிப்பிடப் பட்டிருந்தாலும் சொத்துக்களுக்கு உரிய போதுமான அறிக்கை இன்மை காரணமாக ஒவ்வொரு சொத்தினதும் பயனுள்ள ஆயுட் காலத்தை அடிப்படையாகக் கொண்டு தேய்மானம் கணக்கீடு செய்யப் படவில்லை என அவதானிக்கப் பட்டது. இதனால் நிதி நிலைமைக் கூற்றுக்களில் குறிப்பிடப் பட்டிருந்த தேய்மானம் செலவில் சரியான தன்மையை கணக்காய்வில் பரிசீலனை செய்ய முடியவில்லை. | 2018 ஆம் ஆண்டில் மீனவ மக்களின் பாவனைக்கு வைத்திருந்தமையால் மூலதனப் படுத்தியிருந்ததோடு அதன் படி தேய்மானப்படுதல் ஒழுங்கமைக்கப்படும். | ஒவ்வொரு சொத்தினதும் பயனுள்ள ஆயுட் காலத்தை அடிப்படையாகக் கொண்டு தேய்மானம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வு ஆண்டின் பணிக் கொடை ஒதுக்கீடு ரூ. 7,904,011 பெறுமதியான தொகை குறைவாக குறிப்பிடப் பட்டிருந்தது. | மீளாய்வு ஆண்டிற்குள் நிதியால் செலுத்திய பணிக் கொடை பெறுமதி ரூ. 7,927,252 பெறுமதியான தொகை என்பதாக குறிப்பிடப் பட்டு செலுத்திய ரூ. 113,071 பெறுமதி எனும் தொகை கால தாமதம் காரணமாக தொலை பேசி கட்டணக் கணக்குக்கு திருப்பப் பட்டிருந்தது. | நிதி நிலைமைக் கூற்றுடன் முன் வைக்க வேண்டிய அட்டவணை சரியாக முன் வைக்கப்பட வேண்டியதோடு கணக்குக் குறியீட்டு இலக்கங்களின் சரியான தன்மை பொறுப்புக்கூற வேண்டிய அதிகாரிகளால் பரிசீலனை செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | துறை முகங்களில் நிலவும் எரி பொருள் மற்றும் மசகு எண்ணெய் இருப்பு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அங்கீகரிக்கப் பட்டு பெற்றுக் கொள்ளாது துறை முக முகாமையாளர்களினால் முன் வைக்கப்பட்ட ரூ. 41,784,454 பெறுமதியான தொகை கணக்குகளில் முன் வைக்கப் பட்டிருந்தது. இதன் காரணமாக இருப்பு குறைபாடுகள் அல்லது மிகை தொடர்பாக வெளிக் கொணர முடியாதிருந்தது. | எரி பொருள் மற்றும் மசகு எண்ணெய் இருப்பின் மாற்றங்கள் மீண்டும் பரிசீலனை செய்யப்பட்டு சரிப் படுத்தலுக்காக ஜர்னல் குறிப்பு பயன் படுத்தப்பட்டது. | பௌதீக இருப்பு அங்கீகரிக்கப்பட்ட இருப்புக்கு பொருந்துவதாக முடிவுத் தொகை நிதி நிலைமைக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட வேண்டும். |
| (உ) | சந்தேகத்துக்கிடமான கடன் ஒதுக்கம் ரூ. 7,167,369 பெறுமதியான தொகை குறைவாக ஒதுக்கப் பட்டிருந்தது. | முன் வருடங்களில் சந்தேகத்துக்கிடமான கடன் ஒதுக்கீடு அதிகமாக இடம் பெற்றிருப்பதால் அது மீளாய்வு ஆண்டில் ஜர்னல் இல. 393 இனுாடாக சரி செய்யப் பட்டுள்ளது. | சந்தேகத்துக்கிடமான கடன் ஒதுக்கீடு தொடர்பான சரியான தகவல் முன் வைக்கப்பட வேண்டும். |
| (ஊ) | நிதிப் பாய்ச்சல் கூற்று பணி மூலதன மாற்றங்களின் கீழ் மோட்டார் வாகன விற்பனை இலாபம் ரூபா 8,760,918 பெறுமதியான தொகை மற்றும் வர்த்தக செலுத்த வேண்டியவற்றில் மாற்றம் ரூபா 2,541,536 பெறுமதியான தொகை இனால் அதிகமாகக் காட்டியமையால் இயக்க நடவடிக்கை நிதிப் பாய்ச்சலில் ரூ. 11,302,454 பெறுமதியான தொகையினால் அதிகமாகக் காட்டப் பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் கணக்கு ஒழுங்கமைத்தலில் சரிப்படுத்துவதற்கு குறித்து வைத்துக் கொண்டேன். | அரச பிரிவு கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக நிதிப் பாய்ச்சல் கூற்று ஒழுங்கமைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | நிதிப் பாய்ச்சலில் முதலீடு செயற்பாடுகளின் கீழ் மோட்டார் வாகன விற்பனை மூலம் கிடைத்த ரூ. 5,910,918 பெறுமதியான தொகை மற்றும் நிலையான சொத்துக்களை வாங்க செலவாகிய ரூ. 1,854,793 பெறுமதியான தொகை என்பன குறைவாகக் காட்டப் பட்டிருந்தன. | 2019 ஆம் ஆண்டின் கணக்கு ஒழுங்கமைத்தலில் சரிப்படுத்துவதற்கு குறித்து வைத்துக் கொண்டேன். | அரச பிரிவுக ணக்கியல் நியமங்களுக்கு அமைவாக நிதிப் பாய்ச்சல் கூற்று ஒழுங்கமைக்கப்பட வேண்டும். |

## 1.5.5 கணக்காய்வுக்கான எழுத்து மூல ஆதாரம் இன்மை

---------------------------------------------------------------

| கணக்காய்வுஅவதானிப்பு | முகாமைத்துவம் தெரிவித்த கருத்து | பரிந்துரை |
|---|---|---|
| மொத்த பெறுமதி ரூ. 6,545,273,313 பெறுமதியான நிலையான சொத்து 20 வகையிற்கு உரிய நிலையான சொத்து ஆவண மற்றும் பொருள் கணக்கெடுப்பு அறிக்கை மொத்தம் ரூ. 26,646,026 பெறுமதியான தொகை ஆகிய சந்தைக் கடன்பாடு நிலுவைகள் 4 இற்கு உரிய கடன்பாடு அட்டவணை, பயன் படுத்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் நிலுவைகளை உறுதிப்படுத்தல் அமைச்சின் மானியத்தின் கீழ் மூலதனப் படுத்தியிருந்த அரச மற்றும் வெளி நாட்டு உதவிகளினால் நிறைவேற்றப் பட்டிருந்த ரூ. 83,193,518 பெறுமதியான தொகை என்ற மூலதனப் படுத்தியிருந்த சொத்துக்களுக்கு உரிய பிரதான ஒப்பந்தப் பிரதி மற்றும் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான விபரம் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் கிடைத்தமையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 5 வருடங்களுக்கு மேலாக நிலவும் ரூ. 838,173,606 பெறுமதியான தொகை என்ற நிலுவை ஒழுங்கமைக்கப்படும் விதம் குறிப்பிடப்படும் அட்டவணை மொத்தம் ரூ. 14,991,836 பெறுமதியான தொகை என்ற கடனுக்கு உரிய நிலுவை 6 இற்கு உரியதாக ஒழுங்கமைக்கப் பட்டிருந்தவிதம் குறிப்பிடப்படும் அட்டவணை மற்றும் ரூ. 4,509,025 பெறுமதியான தொகை என்ற ஏனைய | நிலையான சொத்து ஆவணங்கள் சொத்து மறு மதிப்பீட்டுடன் முன் வைக்கப்பட நடவடிக்கை எடுப்பேன். ஏனைய நிலுவைகளுக்கு முகாமைத்துவத்தினால் கருத்து தெரிவிக்கப் படவில்லை. | நிதி நிலைமைக் கூற்றுக்களில் குறிப்பிடப் பட்டிருந்த கணக்கு நிலுவையை உறுதிப்படுத்த தேவையான நிலையான சொத்து ஆவணங்கள் மற்றும் பொருள் கணக்கெடுப்பு அறிக்கை ஏனைய ஆவணங்கள் கடன்பாடு அட்டவணை பயன் படுத்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் நிலுவைகளை உறுதிப்படுத்தல் ஆகிய ஆவணம் சார் ஆதாரங்கள் கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட வேண்டும். |

வைப்புக்கள் ரூ. 15,287,022 பெறுமதியான தொகை என்ற விசேட முன்பண நிலுவை மற்றும் எழுதப்பட வேண்டிய நிலுவையாக குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 81,769,596 பெறுமதியான தொகைக்கு உரிய அட்டவணை மற்றும் எழுத்தாவணம் கணக்காய்வுக்கு முன் வைக்காமையினால் மேற் கூறப்பட்ட விடயங்கள் கணக்காய்வில் திருப்த்தியுடன் அவதானிக்க முடியவில்லை.

## 1.6 கிடைக்க வேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்குகள்

### 1.6.1 கிடைக்க வேண்டிய பணம்

| | கணக்காய்வுஅவதானிப்பு | முகாமைத்துவம் தெரிவித்தகருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடன் நிலுவையின் ரூபா 44,825,023 பெறுமதியான கடன் நிலுவை 2 வருடங்களிலிருந்து மற்றும் ரூ. 141,779,477 பெறுமதியான தொகை என்ற கடன் நிலுவையானது 5 வருடங்களுக்கு கூடிய காலத்திலிருந்து செலுத்தப் பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவம் கருத்து தெரிவிக்கவில்லை. | கடன் நிலுவையை அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வு ஆண்டின் இறுதியில் செலுத்தப்படாத முற்பண நிலுவை ரூ. 36,659,355 பெறுமதியான தொகை என்பதோடு ரூ. 34,744,302 பெறுமதியான தொகையின் மொத்த நிலுவை 5 வருடங்களாக செலுத்தியிருக்கவில்லை. | ஊரிய முன் கட்டணங்களில் பெரிய அளவிலான நோக்கங்கள் நிறைவேற்றப் பட்டிருந்தாலும் இன்வொய்ஸ் மற்றும் அதனோடு தொடர்பான ஆவணங்கள் காணாமல் போயுள்ளன. 2019 ஆம் ஆண்டில் உரிய காரியங்களை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கிறேன். | முன் கட்டணங்கள் தீர்க்கப்படாமைக்கான காரணங்களை பரிசீலனை செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருப்பதோடு இனிமேலும் பொறுப்பின்றி செலுத்த வேண்டியதாக நிதி நிலைமைக் கூற்றுக்களில் குறிப்பிடப் பட்டிருக்கும் நிலுவைகள் வருமானத்தில் திரும்ப எழுதுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்ட திட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பனவற்றோடு ஒவ்வாமை

| | சட்டதிட்டங்கள், ஒழுங்கு விதிகள என்பன தொடர்பான குறிப்புக்கள் | ஒவ்வாமை ரூ. | முகாமைத்துவம் தெரிவித்த கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1957 இன் 49 ஆம் இலக்க அரச தொழில் நுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு மற்றும் மார்ச் 6 ஆம் திகதியுடைய இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அதி விஷேட வர்த்தனமானி அறிக்கை | மீனவர்களிற்கான கடல் பயணத்துக்கான திருத்த வேலை மற்றும் நடாத்துகை வசதிகள் வழங்குதல் கூட்டமைப்பின் பிரதான ஒரு நோக்கம் எனினும் அந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள நடவடிக்கை எடுக்ககப்படவில்லை. | முகாமைத்துவம் கருத்து தெரிவிக்கவில்லை. | கூட்டமைப்பின் பிரதான நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 141 (உ) | வெற்றுக் காசோலைகள் 7 இல் கையொப்பம் இரண்டும் இருப்பதோடு காசோலைகள் 6 இல் இரண்டாம் கையொப்பம் மட்டும் இடப்பட்டிருந்தது. | முகாமைத்துவம் கருத்து தெரிவிக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். . |
| (ii) | நிதிப் பிரமாணம் 454 | பொது 44 ஆவது கட்டமைப்புப் பத்திரத்தின் படி பொருட்கள் தொடர்பான குறிப்புப் புத்தகமொன்று பேணப்பட வேண்டும் எனினும் கூட்டமைப்பின் துறை முகங்கள் 22 உட்பட பிரதான அலுவலகத்தின் உப அலுவலகத்திற்கான பெறுமதி ரூ. 156,222,325 பெறுமதியான தொகை கொண்ட அலுவலக உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களுக்காக குறிப்புப் புத்தகமொன்று பேணப்படவில்லை. | முகாமைத்துவம் கருத்துத் தெரிவிக்கவில்லை | நிதிப் பிரமாணத்தின் படி பொருட்கள் தொடர்பான குறிப்புப் புத்தகமொன்று பேணப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | நிதிப் பிரமாணம் 757 (2) | மீளாய்வு ஆண்டிற்குரிய பொருள் கணக்கெடுப்பு அறிக்கை கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப் படவில்லை. | முகாமைத்துவம் கருத்து தெரிவிக்கவில்லை | நிதிப் பிரமாணத்தின் படி பொருள் கணக்கெடுப்பு செய்து அதன் பிரதி கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிறுவனக் கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 8.2 பிரிவின் படி | சேவையிலிருந்து நீக்கப்பட்ட அதிகாரி ஒருவரை மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளாமல் திணைக்களத்தின் தலைமை அதிகாரி பொறுப்புடன் செயற்பட வேண்டும். எனினும் அதற்கு முரணாக 2012 ஜனவரி 04ம் திகதியிலிருந்து மனிதவள முகாமையாளர் பதவிக்காக அரச நிறுவனம் ஒன்றின் முறையான நன்னடத்தைப் பரீட்சை மேற் கொண்டு நீக்கப்பட்ட ஒரு அதிகாரியை மீண்டும் சேவையில் இணைத்துக் கொண்டிருந்தனர். கணக்காய்வு அறிக்கையில் அது சுட்டிக் காட்டப்பட்டாலும் முகாமைத்துவம் இது தொடர்பாக அவதானம் செலுத்தி இருக்கவில்லை. | முகாமைத்துவம் கருத்துத் தெரிவித்திருக்கவில் லை. | நிறுவனக் கோவையில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதியுடைய இலக்கம் I/A/I/2002/02 கொண்ட திறைசேரி சுற்றறிக்கை | கணணி மற்றும் கணணியின் பாகங்கள் தொடர்பாக எழுத்து மூல ஆவணமொன்று இருக்கவில்லை. | முகாமைத்துவம் கருத்துத் தெரிவித்திருக்கவில் லை. | திறைசேரி சுற்றறிக்கையின் படி எழுத்து மூல ஆவணமொன்று பராமரிக்கப்பட வேண்டும். |
| (உ) | 2003 ஜூன் 02 திகதியையுடைய PED/12 கொண்ட அரச வியாபார சுற்றறிக்கை | | | |
| | (i) 6.5.1 பந்தி | நிதி ஆண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் நிதி அறிக்கை கணக்காய்வுக்காக முன் வைக்கப்பட வேண்டும். கூட்டுத்தாபனத்தினால் | இயக்குனர் குழு நியமிப்பதில் ஏற்பட்ட தாமதத்தினால் நிதி அறிக்கையை முன் வைக்க தாமதமானதை ஒப்புக் | அரச வியாபார சுற்றறிக்கையின் படி நிதி அறிக்கை கணக்காய்வுக்காக முன் வைக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மீளாய்வு ஆண்டுக்கு உரிய நிதி அறிக்கை 134 நாட்கள் தாமதத்துடன் 2019 ஜுலை 12 ஆம் திகதி முன் வைக்கப்பட்டது. மேலும் நிதி அறிக்கையும் வருடாந்த அறிக்கையும் சமர்ப்பிக்கப்படவில்லை. | கொள்கிறேன். | |
| (ii) | 9.7 பந்தி | சம்பள சீர்திருத்தத்துக்காக திறைசேரி செயலாளரிடம் அனுமதி பெறாமல் நிதி முகாமையாளர் பதவிக்காக சம்பள அதிகரிப்பு 34 ஆகவும் கனிஷ்ட முகாமைத்துவமட்டத்தின் பதவியாகியதனியார்உதவிய ாளர்தகுதிகாண் காலப்பிரிவுமுடிவடையமுன் சம்பள அதிகரிப்பு 15 ஆகஒரேதடவையில் வழங்கப்பட்டிருந்ததோடுஉள் ளககணக்காய்வாளர்மற்றும் கணக்காய்வுஅதிகாரிபதவியு ம் பிழையானசம்பளஅளவுகளுட ன் வழங்கப்பட்டது. சட்டஅதிகாரிக்குமாதம் ரூ. 10,000 விஷேட கொடுப்பனவுவழங்கப்பட்டிரு ந்தது. | முகாமைத்துவம் கருத்துத் தெரிவித்திருக்கவில் லை. | சம்பள அதிகரிப்பை செலுத்துவதற்காக திறைசேரி செயலாளரிடம் அனுமதி பெற வேண்டும். அனுமதி பெறாமல் வழங்கப்பட்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவு அதனை வழங்க அனுமதி வழங்கிய அதிகாரியிடம் அறவிடப்படும். |
| (ஊ) | 2015 மே 25 ஆம் திகதியையுடைய அரச வியாபார சுற்றறிக்கை இல. 01 2015<br><br>1ம் பந்தி | போக்கு வரத்து கொடுப்பனவு பெற்றுக் கொள்ள உரித்து இல்லாத MM 1-1 , JM 1-1 குழு அதிகாரிகள் 36 பேருக்கு இயக்குனர் குழு அனுமதியுடன் ரூ. 3,024,000 பெறுமதியான தொகை போக்குவரத்துக் கொடுப்பனவாக மீளாய்வு ஆண்டுக்குள் செலுத்தப்பட்டிருந்தது. | முகாமைத்துவம் கருத்துத் தெரிவித்திருக்கவில் லை. | ஆரச வியாபார சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்க அமைய செயற்பட வேண்டும். |
| (எ) | 2017 ஒக்டோபர் 25 ஆம் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இல.05/2017 | அரச கூட்டுத்தாபனங்களில் சிரேஷ்ட மட்டத்திலுள்ள அதிகாரிகளுக்கான தொழில் சார் கொடுப்பனவு வழங்குவதற்கான சட்ட திட்டங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கையில் அதற்குமுரணாக கூட்டுத்தாபனத்தினால் 2011 | முகாமைத்துவம் கருத்துத் தெரிவித்திருக்கவில் லை. | முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | டிசம்பர் 12 ஆம் திகதி கொண்ட அரச பரிபாலன சுற்றறிக்கை இல. 28/2011 இனை முற்படுத்தி கூட்டுத்தாபனத்தின் பொறியியலாளர் 6 பேருக்கு மாதாந்தம் ரூபா 15,000 படி மீளாய்வு ஆண்டிற்குள் ரூபா 915,000 பெறுமதியான தொகை தொழில் சார் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | 2018 ஜுலை 18 ஆம் திகதியுடைய முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையில் 03/2018 (ii) | முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அனுமதி பெறாமல் ஒருங்கிணைப்பாளர்கள் 7 பேர் சேவையில் சேர்த்துக் கொண்டு 2018 ஜுன் இலிருந்து டிசம்பர் வரை சம்பளம் சட்ட ரீதியான நிதிப் பங்களிப்பாக ரூபா 2,053,935 பெறுமதியான தொகை செலுத்தப் பட்டிருந்தது. சேவைக்கு சமுகமளித்ததாக வரவுப் பதிவு மூலம் உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவம் கருத்துத் தெரிவித்திருக்கவில் லை. | முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

-----------------

## 2.1 நிதி விளைவு

------------------

மீளாய்வு ஆண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 2,696,534 பெறுமதியான தொகையினால் அதிகரிப்பு ஏற்பட்டதோடு முன்னைய வருடத்தில் குறித்த விளைவின் பற்றாக்குறை ரூபா 64,601,644 பெறுமதியான தொகையாக இருந்தது. அதன் படி நிதி விளைவில் ரூபா 67,298,178 பெறுமதியான தொகை வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு செயற்பாட்டு வருமானம் ரூபா 87,835,292 பெறுமதியான தொகையினால் அதிகரித்திருந்தமை மற்றும் நிறுவன பரிபாலனம் மற்றும் நடாத்துகைச் செலவு ரூபா 47,680,625 பெறுமதியான தொகையினால் குறைந்தமை பிரதான காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

## 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

-------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவம் தெரிவித்த கருத்து | பரிந்துரை |
|---|---|---|

| | | |
|---|---|---|
| --------------------------- | ------------------- | ---------- |
| (அ) சிலாபம் துறைமுகத்தில் சுவர் கட்டுமான ஒப்பந்தம் 2016 ஆம் ஆண்டில் 50 மீற்றர் தூரத்திற்கு மணல் மூட்டைகள் அடுக்குவதற்காக தனியார் நிறுவனம் ஒன்றுடன் ஆரம்பித்திருந்த ஒப்பந்தம் அதிக அலை வீச்சின் காரணமாக இடை நிறுத்தப் பட்டிருந்தது. இது வரை நிறுவனத்துக்கு செலுத்திய ரூ.1,079,280 பெறுமதியான தொகை பயனற்ற செலவாக ஆகியுள்ளது. | சிலாபம் முகத் துவாரத்தில் சோதனை மட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட தற்காலிக சுவர் நிர்மாணிக்கும் போது டிசம்பர் 11, 12, 13 ஆகிய தினங்களில் இந்தியாவைத் தாக்கிய அதிக புயல் நிலைமை இலங்கைக்குத் தாக்கம் ஏற்படுத்தியதால் இந்த சுவர் உடைந்துள்ளது. | ஒப்பந்தத்திற்கு அமைய நடவடிக்கை மேற்கொண்டு கூட்டுத் தாபனத்திற்குக் கிடைக்க வேண்டிய நிதியை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) மீன் பிடித் துறை முக சட்ட ரீதியான கூட்டுத் தாபனங்களின் கீழ் 21 துறை முகங்கள் செயற்படுவதோடு அதில் 16 துறை முகங்களின் காணி மீளாய்வு ஆண்டின் முடிவிலும் முறையாக உரிமை மாற்றம் செய்திருக்கவில்லை. | முகாமைத்துவம் கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | துறை முகத்தை நிர்மாணம் செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருந்த காணியை உரிமை மாற்றம் செய்து கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளல் வேண்டும். |
| (இ) கூட்டுத் தாபனத்தினால் மாதாந்த வாடகையை தீர்மானிப்பதில் அரச மதிப்பீட்டாளர்களின் மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக் கொள்ளாது அம்பலங்கொட மீன் பிடி துறை முகத்தில் 40 பர்சஸ் நில அளவு மாதாந்த வாடகை ரூ. 100,000 இற்கு ஐஸ் இயந்திரம் அமைத்து நடாத்திச் செல்வதற்காக 4 பர்சஸ் நில அளவு மாதாந்த வாடகை ரூ. 10,000 இற்கு மசகு எண்ணெய் விற்பனை நிலையம் ஒன்று நடாத்திச் செல்வதற்காக தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது. | முகாமைத்துவம் கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | அரச மதிப்பீட்டு அறிக்கை பெற்று அதற்கு இணங்க கூட்டுத் தாபனத்தின் நிலங்கள் மற்றும் கட்டிடங்களை வாடகைக்கு விடுவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளல் வேண்டும். |
| (ஈ) கூட்டுத் தாபனத்திற்கு உரிய சயுரி இயந்திரம் இலங்கை துறை முக அதிகார சபைக்கு உரிய ஒலுவில் மீன் பிடி துறை முகத்தில் அகழ்வு வேலைகள் நடவடிக்கைகளுக்காக 2016 டிசம்பர் 16 ஆம் திகதியிலிருந்து 2017 மார்ச் 9 வரை ஈடு படுத்தப் பட்டிருந்தது. எனினும் இதற்காக ஒப்பந்தம் ஒன்று செய்திருக்கவில்லை என்பதால் துறை முக அதிகார சபையால் கூட்டுத் தாபனத்திற்குக் கிடைக்க வேண்டிய ரூ. 24,840,000 இனை அறவிட முடியவில்லை. | | |
| (உ) பெறுமதி ரூ. 5,065,075 உடைய எரி பொருள் தாங்கி 6 வழங்க 2007 இல் ரூ. 2,791,215 தொகை முற் பணம் செலுத்தப்பட்டாலும் அந்த எரி பொருள் தாங்கி கூட்டுத் தாபனத்திற்கு | | |

| | | |
|---|---|---|
| கிடைக்காமை தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய வழங்கல் முகாமையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஆலோசனை வழங்கப் பட்டிருக்கவில்லை. வழங்கல் முகாமையாளர் மீள பதவிக்கு அமர்த்தப்பட்டு ஓய்வு பெற்றிருந்த போதிலும் நிகழ்ந்த நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | முகாமைத்துவம் கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | கூட்டுத் தாபனம் அறவிட்டுக் கொள்ள வேண்டிய வருமானங்களைப் பெற்றுக் கொள்வதற்கு முகாமை பொறுப்புடன் நடவடிக்கை மேற் கொள்ளல் வேண்டும். |
| (ஊ) மீன் பிடி துறை முகங்கள் 4 இற்காக 40 டொன் கொள்ளளவு கொண்ட பாலம் தராசு 4 வாங்க மற்றும் பொருத்த 2016 டிசம்பர் 23 ம் திகதி தனியார் நிறுவனம் ஒன்றுக்கு ரூ. 7,478,260 இற்கு (VAT இன்றி) டெண்டர் வழங்கப் பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் படி 121 நாட்களுக்குள் முடிக்க வேண்டும் எனினும் 2019 பெப்ரவரி ஆன போதும் முடிவிக்கப்படாது 2017 பெப்ரவரி 6ம் திகதி மற்றும் 2017 மே 5 ஆம் திகதி கூட்டுத் தொகை ரூ. 4,650,000 இற்கு எந்த காப்பீடுகளும் பெறாது வழங்குனருக்கு செலுத்தப் பட்டிருந்தது. | முகாமைத்துவம் கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | பொறுப்புக் கூற வேண்டிய அலுவலர்களிடமிருந்து நட்டத்தினை அறவீடு செய்து கொள்வதற்கு முகாமை நடவடிக்கை மேற் கொள்ளல் வேண்டும். |
| (எ) 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் எனது அறிக்கையில் காட்டப்பட்ட ரூ. 1,103,979 கணக்கியல் குறைபாடுகள் 2 மீளாய்வு ஆண்டின் போதும் சரிப் படுத்தப் படவில்லை. | பாலம் தராசு பொருத்தும் போது மீன் பிடி மக்களிடமிருந்து பல் வேறு தடைகள் எழுவதோடு அவற்றைத் தீர்க்க மீன் பிடி ஒன்றியத்திடம் பல தடவை கலந்துரையாடியதால் பாலம் தராசு பொருத்துவதற்கு காலம் எடுத்தது. | அரச சட்ட திட்ங்களைப் பின்பற்றாது ஏற்படுத்தப்படும் நட்டங்கள் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய அலுவலர்களை இனங் கண்டு நட்டத்தினை அறவீடு செய்து கொள்வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளல் முகாமை யின் பொறுப்பாகும். |

| | | |
|---|---|---|
| | ரூ. 373,979 குறைவாக மூலதனப் படுத்தல் மீளாய்வு ஆண்டின் நாளேடு வவுச்சரின் மூலம் சரிப் படுத்தப்பட்டது. ரூ. 730,000 இனை உள் நாட்டு மற்றும் வெளி நாட்டு பயிற்சி செலவு பயனுள்ள ஆயுட் காலத்துக்கு தாக்கம் செலுத்துவதால் மூலதனப் படுத்தப்பட்டது. | எடுத்துக் காட்டப்பட்ட குறைபாடுகளைச் சரிப்படுத்தி அவற்றைக் கணக்காய்வில் அறிக்கயிடப்பட வேண்டும். |

**3.2 வினைத்திறனற்ற செயற்திட்டம்**

| கணக்காய்வுஅவதானிப்பு | முகாமைத்துவம் தெரிவித்தகருத்து | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2014 ஆம் ஆண்டிற்கு முன் மொத்த செயற்பாட்டு இலாபத்தில் நூற்றுக்கு 73 வீதம் ஈட்டித் தந்த முகத் துவார மீன் பிடி துறை முகம் 2014 ஒக்டோபர் 30 ம் திகதியிலிருந்து 25 வருட காலத்துக்கான தனியார் மதிப்பீட்டாளர் ஒருவரின் மதிப்பீட்டுப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு ரூ. 125,000 மாதாந்த கட்டணத்துக்கு தனியார் நிறுவன மொன்றுக்கு வாடகைக்கு விடப் பட்டிருந்தது. பின்பு கூட்டுத் தாபனத்திற்கும் வாடகை பெறுநர்களுக்கம் இடையில் 2015 ஜுன் 10 ஆம் திகதி செய்து கொண்ட மேலதிக ஒப்பந்தத்தில் 3 ஆம் இலக்க நிபந்தனையின் படி அரச மதிப்பீட்டாளரின் மாதாந்த வாடகைக் கட்டணம் ரூ. 1,700,000 அறவிடுவதாக ஒத்துக் கொண்டிருப்பினும் அந்த மதிப்பீட்டுப் பெறுமதிக்கு துறைமுகப் படுகை (Harbour Basin) உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. அரச மதிப்பீட்டாளரின் மாதாந்த வாடகைக் கட்டணம் அறவிடப் | முகாமைத்துவம் கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | அரச சொத்து நிலவும் பொருளாதார வாடகைக் கட்டணத்தின் படி வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து அரசுக்குக் கிடைக்க வேண்டிய உச்ச வருமானம் சொத்துக்களால் ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறே கிடைக்க வேண்டிய மீத வருமானம் தாமதமின்றி அறவிடப்பட உரிய நடவடிக்கையை அவசரமாக முகாமைத்துவம் எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | படாமையால் மீளாய்வு ஆண்டின் முடிவில் ரூ. 63,228,776 வாடகை வருமானம் மற்றும் தற்போதுள்ள ஒப்பந்தத்தின் படி அறவிடப்படும் மாதாந்த வாடகைக் கட்டணம் மற்றும் நங்கூரக் கட்டணத்தின் படி 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூ. 1,720,030 கூட்டுத் தாபனத்திற்குக் கிடைக்க வேண்டியிருந்தது. | | |
| (ஆ) | கூட்டுத் தாபனத்தின் கீழ் செயற்படும் மீன் பிடி துறை முகங்கள் 20 இல் துறை முகங்கள் 15 உம் மீளாய்வு ஆண்டினுள் ரூ. 168,539,219 இன் செயற்பாட்டு நட்டமாக இருந்ததோடு அதில் 14 துறை முகங்கள் முன்னைய வருடத்திலும் நட்டம் அடைந்திருந்தன. நட்டம் அடையும் துறைமுகங்களில் நட்டத்திற்கான காரணங்களை ஆராய்ந்து இலாபமடையும் நிலமைக்குக் கொண்டு வர முகாமைத்துவம் அவதானம் செலுத்தவில்லை. | முகாமைத்துவம் கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | செலவைக் குறைத்து வர வேண்டிய வருமானத்தை அறவிட்டு நட்டம் அடையும் துறை முகங்களில் இலாபமடையும் நிலமைக்குக் கொண்டு வர முகாமைத்துவம் நடவடிக்கையை எடுக்க வேண்டும். |

## 3.3 கருத்து வேறுபாடுகளுக்கு வழிவகுக்கும் கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------------------------------------------

| | கணக்காய்வுஅவதானிப்பு<br>------------------------------ | முகாமைத்துவம் தெரிவித்த கருத்து<br>---------------------- | பரிந்துரை<br>----------- |
|---|---|---|---|
| (அ) | பாணதுறை முகத் துவாரத்தில் மணல் நீக்குவதற்காக அனுமதியின்றி 2014 ஆம் ஆண்டில் தனியார் நிறுவன மொன்றுடன் ஒப்பந்தம் செய்து பிணை பெற்றுக் கொள்ளாது ரூ. 20,000,000 முற் பணம் அந்த நிறுவனத்துக்கு வழங்கப் பட்டிருந்தது. 2015 டிசம்பர் 10 ஆம் திகதி மேலதிக ஒப்பந்தத்தில் நிபந்தனையின் படி தனியார் நிறுவனத்தினால் அகழப்பட்ட மணலை விற்று கிடைக்கும் பணத்தில் முன் பணம் செலுத்தப்பட வேண்டு மெனினும் மீளாய்வு ஆண்டின் முடிவு வரை அந்த பணம் அறவிடப்படவில்லை. | முகாமைத்துவம் கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | அரசின் சட்டதிட்டங்களைப் பின்பற்றாது நிகழும் நட்டம் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய அதிகாரிகளை இனங்கண்டு அடுத்த கட்ட நடவடிக்கை எடுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். தேவையான தொகுதிமற்றும் கட்டுப்பாட்டு முறை அறிமுகப் படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2013 டிசம்பர் 29 ஆம் திகதி ஒப்பந்தத்தின் படி கொட் பே மீன் பிடி | நிலுவை வருமான வரியை அறவிடுவதற்கு | வருமன வரியை அறவிடுதல் முகாமையின் பொறுப்பாகும். |

| | | |
|---|---|---|
| துறை முகத்திடமிருந்த 100 டொன் தியத் மக, சேவையாளர் தங்குமிடம் மற்றும் இயந்திர வேலைத் தளம் 6 மாதத்திற்குள் திருத்த வேலை செய்து பயன்படுத்த தனியார் ஒருவருக்கு வாடகை அடிப்படையில் ஒப்படைக்கப் பட்டிருந்தது. கணக்காய்வு தினமாகிய 2018 ஆகஸ்ட் 30 ஆம் திகதி 4½ வருட காலத்தைத் தாண்டிய போதும் அபிவிருத்தி செய்யும் முக்கிய நோக்கம் நிறைவேற்றப்படாது முன்னைய ஆண்டின் முடிவில் வாடகை பெறுநரின் ரூ. 1,690,500 வாடகைப் பணம் அறவிட கூட்டுத் தாபனம் நடவடிக்கை எடுக்கவில்லை. | உடன்படிக்கைக்கு அமைய சட்ட நடவடிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது. | |

## 3.4 பெறுகை முகாமைத்துவம் (கொள்வனவு முகாமைத்துவம்)

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவம் தெரிவித்தகருத்து | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீன் பிடி துறைமுகங்கள் 6 இன் எரி பொருள் தாங்கி வழங்கப்பட்டு பொருத்துவதற்கு தனியார் நிறுவன மொன்றுடன் ரூபா 11,363,000 இற்கு ஒப்பந்தம் மூலம் ஒத்துக் கொள்ளப் பட்டிருந்தது. உரிய காலத்தை விட 506 நாட்கள் தாமதமாயினும் எரிபொருள் தாங்கி பொருத்துதல் நிறைவேற்றப்படலில்லை. | முகாமைத்துவம் கருத்துத் தெரிவிக்கவில்லை. | ஒப்பந்தம் முடிவுற முன்னர் பிணைமுறி புதுப்பிக்கப்படாமையால் தாமத காலத்திற்காக ஒப்பந்தத்தின் படி தாமதக் கட்டணம் அறவிடாமை மற்றும் தாங்கிகள் முறையாகப் பொருத்தாமை தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) மீன்பிடி துறைமுகங்கள் 8 இற்கான எரிபொருள் பொம்ப் ரூபா 19,121,000 இற்கு வாங்கும் ஒப்பந்தம் 2016 நவம்பர் 22 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. தொழில் நுட்ப விபரக் குறிப்பின் படி பொம்ப்களின் கொள்ளளவு நிமிடத்துக்கு 150 லீட்டர் ஆக இருக்க வேண்டும் எனினும் வழங்கப்பட்ட பொம்ப்களின் கொள்ளளவு நிமிடத்துக்கு 138 லீட்டர் ஆக இருந்தது. கூட்டுத் தாபனத்தின் தேவைக்குப் பொருந்தாத எரிபொருள் பொம்ப் வழங்குநரால் வழங்கப்பட்டுள்ளமை மற்றும் துறைமுகங்களுள் பொருத்தப்பட்டிருந்த எரிபொருள் பொம்ப் 2019 மார்ச் 11 ஆம் திகதியின் போது பாவனை செய்யாமை காரணமாக வழங்குநருக்கு செலுத்தியிருந்த ரூபா 3,824,200 | எரிபொருள் பொம்ப் இற்கான தொழில் நுட்ப விபரக் குறிப்புகளில் காணப்பட்ட குறைபாடுகளினால் எரிபொருள் பொம்ப் விலை கொடுத்து வாங்கும் செயற்பாடு நிறுத்தப்பட்டுள்ளதோடு வழங்குநரால் நிறுவப்பட்டது உரிய விபரக் குறிப்புகளில் அல்லாதது என்பது அந்த நிறுவனத்தினால் ஏலம் கோருதல் மூலம் முன்வைக்கப்பட்ட விபரக் குறிப்புகளுடன் ஒப்பீடு செய்யும் போது தெளிவாகியது. செயற் திறன் விபரக் குறிப்புகளை நீட்டிக் கொள்வதற்காக | கூட்டுத்தாபனத்தின் தேவையைக் கருத்திற் கொண்டு விலை கொடுத்து வாங்க வேண்டும். இது தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய அதிகாரிகளை இனங் கண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| பயனற்ற செலவாகியது. ஒப்பந்தத்தின் படி பொருளை வழங்காமை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை. | கோரப்பட்டிருந்ததோடு அதனிடையில் அது வரை எரிபொருள் பொம்ப்கள் சில துறைமுகத்தில் நிறுவப்பட்டிருந்தன. அந்த எரிபொருள் வழங்கும் பொம்ப்களை பரிசீலனை செய்கையில் இந்த செயல்திறன் விபரக்குறிப்புகள் காலாவதியாகிவிட்டன. | |

**3.5** ஒப்பந்த பரிபாலனத்திலுள்ள குறைபாடுகள்

-----------------------------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவம் தெரிவித்தகருத்து** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) மீன்பிடி துறை முகங்களின் சட்ட மயப்படுத்தப்பட்ட கூட்டுத் தாபனத்தின் காரியாலயக் கட்டடத்தின் கட்டுமானம் 6 மாதங்களுக்குள் முடிவிக்கப்பட்டு ஒப்படைப்பதற்காக 2017 ஆகஸ்ட் 29 ஆம் திகதி ரூபா 18,223,081 இன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. 2019 ஜுன் 30 ஆம் திகதி வரை வேலை முடிவிக்கப்படாமை காரணமாக ஒப்பந்தத்தின் 17 ஆம் பிரிவின் படி அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 1,876,969 அறவிடப்படப் பட்டிருக்கவில்லை.<br><br>அரசின் விநியோக வழிகாட்டல் கோவையின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக ரூபா 16,180,537 கொண்ட குறித்த கட்டடத்தின் கட்டுமானப் பணிக்காக செலுத்தப் பட்டிருந்தது. | ஒப்பந்தத்தின் 18 ஆம் பிரிவின் படி குறித்த ஒப்பந்தத் திட்டம் நியமிக்கப்பட்ட காலப் பிரிவினுள் முடிவிக்க முடியாத வேலைக்கான மேலதிகமான நாட்களுக்காக 0.5% என்பதாக ஒதுக்கப்பட்டு இருந்தது. | அரசின் சட்ட திட்டங்களைப் பின்பற்றாது நிகழ்ந்த நட்டம் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய அதிகாரிகளை இனங் கண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது முகாமைத்துவத்தின் கடமையாகும். |
| (ஆ)சிலாபம் சுவர்க்கட்டுமானம் 4ஆம் கட்டத்தின் கீழ் கட்டுவதற்குரூ. 16.5 மில்லியன் கொண்டஒப்பந்தம் வழங்கியிருந்தநிறுவனகட்டுமானப் பயிற்சிமற்றும் அபிவிருத்திநிலையத்தில் பதிவுசெய்யப்படவில்லைஎன்பதோடுவேறுநிறுவனமொன்றில்பதிவைமுன்வைத்து இருந்தாலும் தொழில்நுட்பகணிப்பீட்டுக் குழு பதிவை உறுதிப்படுத்திக் கொள்ளாது ஒப்பந்தத்தை வழங்கியிருந்தது. | CIDAதரத்தைஅடிப்படையாகக் கொண்டு இந்தஒப்பந்தத்தைவழங்கியிருந்தது. | தொழில் நுட்பக் கணிப்பீட்டுக் குழுவினால் ஒப்பந்தக் காரர்களின் தகுதி சார் பரிசீலனை மேற்கொண்டு அது தொடர்பாக டெண்டர் சபைக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.6 வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமையின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை |
| --- | --- | --- |
| கூட்டுத் தாபனத்தின் மூலம் தொடர்புற்ற அமைச்சு மற்றும் வேறு அரச நிறுவனங்களுக்கு கூட்டுத் தாபனத்தின் 18 வேலையாட்கள் விடுவிக்கப்பட்டு மீளாய்வு ஆண்டின் போது சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் என்ற அடிப்படையில் ரூபா 10,405,318 பெறுமதியான தொகை செலுத்தப்பட்டு இருந்தது. | அமைச்சுக்கு விடுவிக்கப் பட்டுள்ள வேலையாட்களினுள் இருந்து ஒரு பகுதியினர் மீணடும் எமது நிறுவனத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளதுடன் இன்னும் சிறு பகுதியினர் அதற்கு இணைக்கப்பட்டு சேவை மேற் கொள்கின்றனர். இந்தக் குழுவினரும் எதிர் காலத்தில் கூட்டுத் தாபனத்திற்கு அழைக்கப்பட உள்ளனர் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. | 2003 ஆம் ஆண்டின் ஜூன் மாத 02 ஆம் திகதியிடப்பட்ட அரச நிறுவன சுற்றறிக்கை இலக்கம் 12 இல் குறிப்பிடப் பட்டுள்ள ஆலோசனைகளுக்கு இணங்க செயற்படாத அலுவலர்களை இனங் கண்டு சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும். |

## 3.7 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமையின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2007 ஆலோசனைச் சேவை கொள்வனவு வழி காட்டற் கோவையின் 4 ஆம் பந்தியின் ஆலோசனைச் சேவை தொடர்பாக ஆலோசனையாளர் ஒருவரை சேர்த்துக் கொள்வதற்கு அவசியமான விதி ஒழுங்கு முறைக்கு முரணாக மற்றும் முகாமைச் சேவைத் திணைக்களத்தின் அனுமதி இன்றி கூட்டுத் தாபனம் மூலம் 2018 ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை கூட்டுத் தாபனத்தின் முகாமைப் பணிப்பாளர் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் ஒரு வருட காலப் பகுதி வரை நியமிக்கப் பட்டிருந்தார். அந்தத் திகதியிலிருந்து நிரந்தர பதவியின் சம்பளத்திற்கு மேலதிகமாக 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை மாதாந்தக் கொடுப்பனவு மற்றும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு என்ற அடிப்படையில் ரூபா 370,113 பெறுமதியான தொகை செலுத்தப் பட்டிருந்ததுடன் எந்த விதமான ஆலோசனை அறிக்கைகளும் வழங்கப்பட்டு இருக்கவில்லை. | 2013 ஆம் ஆண்டு ஜனவரி 17 ஆம் திகதிக்கு அனுமதிக்கப்பட்ட பணியாளர் தேவை ஆவணம் தொடர்பாக அனுமதி வழங்கும் போது அப்போது சேவை புரிந்த அனைத்து அலுவலர்களும் அந்தப் பணியாளர் ஆவணத்தில் உள்ளடங்காத கரரத்தினால் இவ்வாறு மிகைப் பணியாளர்களாகக் காட்டப்பட்டுள்ளது. | அரச சட்ட திட்ங்களைப் பின்பற்றாமல் மேற் கொள்ளப்பட்ட நட்டங்கள் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய அலுவலர்கள் இனம் காணப்பட்டு சட்ட நடவடிக்கை எடுப்பது முகாமையின் பொறுப்பாகும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கூட்டுத் தாபனத்தின் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாத 31 ஆம் திகதிக்கு அனுமதிக்கப்பட்ட பணியாட் தொகுதிக்கு மேலதிகமாக 284 பேரும் முகாமைச் சேவைத் திணைக்களத்தின் மூலம் அனுமதிக்கப்பட்ட பதவிகளுக்கு அப்பால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட பதவிகள் 22 இற்கு பணியாளர்கள் 204 பேரும் சேர்த்துக் கொள்ளப்பட்டு இருந்தனர். | முகாமை கருத்துத் தெரிவிக்கவில்லை. | முகாமைச் சேவைத் திணைக்களத்தின் மூலம் அனுமதிக்கப்பட்ட பதவிகள் தொடர்பாக மட்டும் அலுவலர்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2007 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கை ஒன்றுக்கு இணங்க வினியோகப் பிரிவில் கடமை புரிந்து அரச நிதி முறை கேடு தொடர்பில் சம்பந்தப்பட்ட எழுது வினைஞர் அலுவலர் ஒருவரிடம் இருந்து அரசுக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளாது மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கையும் மேற் கொள்ளாது 2014 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆம் திகதியிலிருந்து அவர் மீண்டும் அதே பிரிவிற்கு இணைக்கப்பட்டு இருந்தார். | முகாமை கருத்துத் தெரிவிக்கவில்லை. | அரச நிதி முறை கேடு தொடர்பில் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அமுலில் உள்ள சட்ட திட்ங்களைப் பின்பற்றி அலுவலர்கள் இனம் காணப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்கியல் சார் செயற்பாடுகளின் தன்மை மற்றும் நல்லாட்சி

-----------------------------------------------------------

## 4.1 கணக்காய்வுக் குழு.

-----------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமை தெரிவித்த கருத்து | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 2 ஆம் திகதியின் இல. பீ ஈ டி / 12 கொண்ட அரச வியாபார சுற்றறிக்கையின் 7.4.1 பிரிவின் படி 3 மாதங்களுக்கு ஒரு முறை கணக்காய்வுக் கூட்டம் ஒன்று நத்தப்பட வேண்டும் என்பதுடன் ஒரு வருடத்திற்கு ஆகக் குறைந்தது 4 கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் எனினும் அதன் படி நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு இருக்கவில்லை. மீளாய்வு ஆண்டின் போது 3 கூட்டங்கள் மட்டும் நடத்தப்பட்டு இருந்ததுடன் சென்ற கூட்டங்களின் தீர்மானங்கள் செயற்படுத்தல் அல்லது பின்னூட்டல் செய்யப்படல் போன்ற நடவடிக்கைகள் பலவீன நிலையில் காணப்பட்டது. | முகாமை கருத்துத் தெரிவிக்கவில்லை. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் விதி முறைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |